ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1871/23 - 2014 ජූලි මස 15 වැනි අඟහරුවාදා - 2014.07.15
1871/23 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 04 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான 2014.05.21 ஆந் திகதிய 1863/13 ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உருளைக்கிழங்கு (எச். எஸ். தலைப்பு இல. 0701.90), அத்துடன் சீனி (எச். எஸ். தலைப்பு இல. 17.01) ஆகியவற்றின் கீழும் வழங்கப்பட்ட உத்தரவு 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, யூலை 15

அட்டவணை

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 07.01 | 0701.90 | பிற - உருளைக்கிழங்கு | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 5.00 |
| 2. | 17.01 | | கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான (சுக்கோ றோஸ்) வெல்லமும் திண்மையான உருவில் | |
| | | | பதனிடப்படாத சீனி, மேலதிக மணமூட்டப் படாதவையும் நிறமூட்டப்படாதவையும் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *இல.* | *எச்.எஸ். தலைப்பு* | *எச்.எஸ். குறியீடு* | *விவரணம்* | |
| | | *1701.12* | பீற் சீனி | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |
| | | *1701.13* | கரும்பு வெல்லம் | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |
| | | *1701.14* | பிற கரும்பு வெல்லம் | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |
| | | | பிற | |
| | | *1701.91* | சுவையூட்டிகளையோ நிறமூட்டுகைகளையோ கொண்டவை | |
| | | *1701.91.10* | சீனி | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |
| | | *1701.91.90* | பிற | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |
| | | *1701.99* | பிற | |
| | | *1701.99.10* | வெள்ளைப்பளிங்குருவான கரும்புச் சீனி | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |
| | | *1701.99.20* | வெள்ளைப்பளிங்குருவான பீற் சீனி | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |
| | | *1701.99.30* | பிற சீனி | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |
| | | *1701.99.90* | பிற | *கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 28.00* |

*8- 272*